செ.வெ.எண்-13 நாள்-07.02.2018

# அரியலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்குவதற்கான நேர்முகத்தேர்வு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு 2017-2018ஆம் நிதியாண்டிற்கான விலையில்லா இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்குவதற்கான நேர்முகத்தேர்வு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (07.02.2018) நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் பெறுவதற்கு 41 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

இந்நேர்முகத்தேர்வில், 41 மாற்றுத்திறனாளிகள் கலந்துகொண்டனர். மாற்றுத்திறனாளிகளின் உடல் பாதிப்பு சதவீதத்தின் அடிப்படையில் தேர்வுக்குழு மூலம் தேர்வு செய்யப்பட்டு, விலையில்லா இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்படவுள்ளது.

இந்நேர்முகத்தேர்வில், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் ஆர்.பாலாஜி, மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-1) பி.பிரபாகர், அரசு எலும்பு முறிவு மருத்துவர் மரு.டி.பிரவின்குமார் மற்றும் மாற்றுத்திறனாளிகள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.